www.publicvigilancecounciltn.org

தாய் மண்ணே வணக்கம்! தமிழ் மண்ணே வணக்கம்!!

மலர் - 16
இதழ் - 2
பிப்ரவரி-2017
விலை ரூ.7/-

# KANKANIPPAALAN

# கண்காணிப்பாளன்

kkpnmagazine@gmail.com

மாதஇதழ்

















# பள்ளிகொண்டா பகுதி அணைக்கட்டு – புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம்

22.1.2017 அன்று வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா பகுதியில் பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில்தமிழ்நாடு அமைப்பின் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் ஏ.பாலாஜி தலைமையில் நடைபெற்றது. அமைப்பின் தலைவர் எஸ். மோகன், நிறுவனர் / செயலாளர் இ. செல்வராஜ், கலந்து கொண்டு பள்ளி கொண்டா பகுதியின் புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து வைத்து, அடையாள அட்டையை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சட்ட ஆலோசகர் பூவை இல. ரமேஷ், உதவி பி.ஆர்.ஓ. த.நா. எம். பழனி, ஆலோசகர், வி.பாடி பகுதி, பி.எம்.ராஜா, கொடுங்கையூர் பகுதி ஆலோசகர் ஏ. விஜயகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அமைப்பின் சார்பாக வேலூர் மாவட்ட பி.ஆர்.ஓ. ஏ. பாலாஜி,. அணைக்கட்டு பகுதி பி.ஆர்.ஓ. ஆர். ரஞ்சித், உதவி பி.ஆர்.ஓ. எம்.வினோத் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எம்.ஜி.ஆர். 100வது ஆண்டு

# இருந்தாலும் மறைந்தாலும் பேர்ச் சொல்ல வேண்டும்!



**நா**ம் எல்லாரும் சாதாரண மனிதர்கள். மகாத்மா காந்தி, சுபாஷ் சந்திர போஸ், காமராஜர், அப்துல் கலாம் போன்றவர்கள் மாமனிதர்கள். தங்களுக்காக மட்டும் வாழமல், தங்கள் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் சமுதாயத் துக்காக அர்ப்பணித்த பெருந்தகைகள் இவர்கள். அந்த வரிசையில் எம்.ஜி.ஆரும் ஆவார்.

வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி மக்களின் மனங்களில் நிற்பவர் யார்? - எம்.ஜி.ஆர். மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கிறார். அந்த மாமனிதரின் வாழ்க்கை மற்ற மாமனிதர்களின் வாழ்க்கையில் இருந்து முற்றிலும் மாறுபட்டது.



### ரத்தத்தின் ரத்தங்களே

ரத்தத்தின் ரத்தம் என்று ஏன் சொல்கிறீர்கள் என்று எம்.ஜி.ஆரிடம் கேட்டபோது, அவர் சொன்னார். நான் குண்டடிப்பட்டு, அறுவை சிகிச்சைக்காக ரத்தம் தேவைப்பட்டது. என் பிரிவு ரத்தம் சிரமப் பட்டுக் கிடைத்தது. ஒரே ரத்தம் என்று சொல்வது தவறு. அதிலும் பலவகை. என் பிரிவு ரத்தம் தேடிப்பிடித்து என் உடலில் செலுத்தப்பட்டது. அது யார், யார் ரத்தமோ எனக்குத் தெரியாது. என் ரத்தத்துடன் சிலரது ரத்தமும் கலந்து விட்டதால் நான் "என் ரத்தத்தின் ரத்தங்களே" என்று சொல்லுகிறேன் என்றார்.

### ரெயின்கோட்

1961 ல் வாகினி ஸ்டுடியோ நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு படப்பிடிப்பிற்காக எம்.ஜி.ஆர். காரில் சென்று கொண்டிருந்தார். கோடம்பாக்கம் இரயில்வேகேட் திறக்கும்வரை காரில் காத்துக் கொண்டிருந்தார். அப்போது சற்று தொலைவில் ஒரு ரிக்ஷா தொழிலாளி ரிக்ஷாவில் அமர்ந்தபடியே மழையில் நனைந்து கொண்டிருப்பதை எம்.ஜி.ஆர் கண்டார். அவர் மிகவும் மனம் வருந்தினார்.

தொடர்ச்சி 5ம் பக்கம்









சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் முதல் அமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்துடன் வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கம், அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், வேளாண்மைத்துறை சிறப்பு விருது ஆகிய பதக்கங்கள் மற்றும் விருது பெற்றவர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.









29.1.2017 அன்று சென்னை அம்பேத்கர் அரங்கத்தில், எஸ்.கே. மீடியான டெவலப்பர்ஸ் சார்பில் அப்துல்கலாம் விருது வழங்கும் விழா நடைபெற்றது. சிறுவர், சிறுமியர் பரத நாட்டியம், பாட்டு, இசை நிகழ்ச்சி, அரை மணி நேர, டி. விஜயலட்சுமி தயாரிப்பில், மு. கவிமதி இயக்கத்தில் குறும்படம் திரைப்படப்பட்டது. மு. கவிமதி எழுதிய தணலும் தணியும் என்ற புத்தகத்தை, இதய கீதம், இராமானுஜம் அவர்கள் வெளியிட, தமிழன் தொலைக்காட்சி இயக்குனர் கலைக்கோட்டுதயம் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சில் இளந்தென்றல் இ. செல்வராஜ், ஆசிரியர் கண்காணிப்பாளன், டாக்டர் ஆர். சரவணன், நிறுவனர் தலைவர் தென்னிந்திய விஸ்வகர்ம சங்கம், மற்றும் சீதா. கோபாலகிருஷ்ணன், ராமதாஸ், என்.எஸ். மோகனா ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தவர் சங்கீதா.

**3ம் பக்கத் தொடர்ச்சி**

பிறர் துயர்படும்போது அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் ஓடோடி வந்து உதவுவதில் இந்த வள்ளலுக்கு நிகர் வேறு யாரும் உண்டோ? அந்த தாக்கத்தில் இருந்து மீளாத எம்.ஜி.ஆர். உடனே ரிக்ஷா தொழிலாளர்கபள் 2000 த்திற்கும் மேற்பட்டோருக்கு ரெயின்கோட் மற்றும் தொப்பி வாங்கித் தர ஏற்பாடு செய்தார். அண்ணா தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

ஒருமுறை காஷ்மீருக்கு படிப் பிடிப்புக்காக சென்றிருந்தபோது, அங்கு கார் ஓட்ட அப்துல்லா என்ப வரை நியமனம் செய்திருந்தனர்.

எம்.ஜி.ஆர். மிகவும் பாசத் துடன் நடந்து கொண்டவிதம், அள்ளி அள்ளி கொடுக்கும் குணம் இவற்றையெல்லாம் நேரில் பார்த்த அப்துல்லா வுக்கு எம்.ஜி.ஆர். மீது தனி ஈர்ப்பு ஏற்பட்டது. எம்.ஜி.ஆரை தன் வீட்டிற்கு அழைத்தார். அப்துல்லா வீட்டிற்கு சென்றார் எம்.ஜி.ஆர்.

மிகவும் மகிழ்ச்சி அடைந்த அப்துல்லா, வீட்டில் உள்ள அனைவரையும் அறிமுகம் செய்து வைத்தார். அப்துல்லாவின் தாத்தா ஒரு அழகான தொப்பையைக் கொண்டுவந்து கொடுத்தார். எம்.ஜி.ஆர். அந்த தொப்பியை வாங்கி அணிந்து கொண்டார். தொப்பியுடன் பார்த்த அனைவரும் மிகவும் அழகாக இருப்பதாக சொன் னார்கள்.

உடனே அப்படியா... இந்த தொப்பி இனி மேல் என் தலையிலேயே இருக்கட்டும். இது எனது தோற்றத்துக்கு கிரீடமாக இருக்கட்டும் என்றார். சொன்னது போல தன் கடைசி மூச்சு உள்ளவரை தொப்பியைக் கழற்றவே இல்லை.

**ஒற்றுமைகள்**

அண்ணா - எம்.ஜி.ஆர். இருவரும் பிறப்பில் நடுத்தரக் குடும்பத் தில் பிறந்தவர்கள்.

அண்ணா, எம்.ஜி.ஆரை இதயக்கனி என்றார். எம்.ஜி.ஆர். அண்ணாவை இதய தெய்வம் என்றார்.

இருவரும் மக்களை ஈர்ப்பதில் தனித்துவம் பெற்றிருந்தனர். அதில் வெற்றியும் கண்டனர்.

நோயின் காரணமாக அமெரிக் காவில் சிகிச்சை பெற்றவர்கள் நள்ளிரவில் இறந்தனர்.

அண்ணா இறக்கும்முன் என்.எஸ். கிருஷ்ணன் சிலையைத் திறந்துவைத்தார். எம்.ஜி.ஆர். கடைசியாக நேரு சிலையைத் திறந்து வைத்தார்.

இருவரும் முதல் அமைச்சர் பதவியில் இருக்கும்போதே இறந்தனர். இருவரது உடலும் அருகருகே மெரினா கடற்கரையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.








# நெகிழ்ந்த எம்.ஜி.ஆர்.




தமிழகத்தை ஆண்டு மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்த எம்.ஜி.ஆர். ஒருமுறை கும்பகோணத்தில் தான் படித்த யானையடி தொடக்கப்பள்ளிக்கு வந்தபோது நெகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் வடித்துள்ளார்.

சிறுவயதில் எம்.ஜி.ஆர். கும்பகோணம் பெரிய தெருவில் தாய் சத்தியபாமா, அண்ணன் சக்ரபாணியுடன் வசித்து வந்தார். அப்போது வீட்டின் அருகிலேயே உள்ள யானையடி தொடக்கப் பள்ளியில் 1922 முதல் 1925 வரை படித்துள்ளார்.

படித்துக் கொண்டிருக்கும் போதே, எம்.ஜி.ஆரையும் அவரது அண்ணனையும் பாய்ஸ் நாடக கம்பெனியினர் நாடகத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டனர். அதன்பிறகு எம்.ஜி.ஆர் பள்ளிக்குச் செல்லவில்லை. தொடர்ந்து நாடக நடிகராகி, திரைப்பட நாயகராக வலம் வந்து, தமிழக முதல்வராக இருந்தபோது, கும்பகோணத்துக்கு ஒருமுறை வருகை தந்தார்.

அப்பொழுது தான் படித்த யானையடி தொடக்கப்பள்ளிக்குச் சென்று, பள்ளி சேர்க்கை பழைய பதிவேட்டில் தனது பெயர் இருந்ததைப் பார்த்து, அதில் அவரே கோடிட்டார். பின்னர் பள்ளியின் வகுப்பறையை பார்வையிட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்து கண் கலங்கினார்.

எம்.ஜி.ஆர். படித்த பள்ளி என்பதற்காக இதை அவ்வப்போது நகராட்சி நிர்வாகம் பராமரித்து வைத்திருந்தது. கடந்த ஆண்டு ரூ70 லட்சம் செலவில் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டு, முகப்பில் எம்.ஜி.ஆர். சிலையும் அமைக்கப்பட்டது. அதன்பின் இப்பள்ளிக்கு ஐஎஸ்ஓ 9001-2008 சான்று வழங்கப்பட்டது.

## அறிவிப்பு

கண்காணிப்பாளன் மாதஇதழில் நிருபராக செயல்பட்டு வந்த **பி. இராமலிங்கம், பி. சிவசங்கரன், எஸ். கிருஷ்ணமூர்த்தி** ஆகியோர் கண்காணிப்பாளன் நிருபர் அடையாள அட்டை 2016 ஆண்டுடன் முடிவடைந்து விட்டதால் மேற்படி நபர்களுக்கும், கண்காணிப்பாளன் மாத இதழுக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

**PUBLIC VIGILENCE COUNCIL TAMILNADU**

**பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு**

தலைவர் **லயன் எஸ்.மோகன்** B.A,B.L.
செல் : 81220 66228, 94440 66228

நிறுவனர் / செயலாளர் : **இ.செல்வராஜ்,**
செல் : 94444 06321, 98841 99387,

**80, கோனிகா காம்ப்ளக்ஸ் 2வது மாடி, தம்புசெட்டி தெரு, சென்னை - 1**

# PUBLIC VIGILENCE COUNCIL TAMILNADU

## பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு

## ஆக்கப்பணிகளும் முக்கிய நோக்கங்களும்

1. காவல் துறையுடன் இணைந்து இரவு ரோந்துப்பணி, போக்குவரத்து சீரமைப்புப் பணி, ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்,
2. திருவிழாக்களின் போது காவல் துறையுடன் இணைந்து பாது காப்புப் பணியில் ஈடுபடுவது.
3. விழாக்காலங்களில் பக்தர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வரிசைப்படுத்தி, போக்குவரத்துச் சீரமைத்து இலவசமாகத் தண்ணீர் பாக்கட்டுகள், அன்னதானம் வழங்குதல்.
4. மாவட்டம் முழுவதும் கள்ளச்சாரயத்தை முற்றிலும் ஒழிப்பதற்குப் பிரச்சாரம் செய்தல்.
5. தேர்தல் நேரங்களில் மாவட்டம் முழுவதும் தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுதல்.
6. சுதந்திரதினம், குடியரசுதினம் போன்ற தேசிய நிகழ்ச்சிகளில், தேச விரோதிகளை அடையாளம் கண்டறிந்து, விபத்தினைத் தடுக்கவும், பொது மக்களிடையே அறிக்கை, விளம்பரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
7. குற்றங்களைத் தடுக்கவும், போக்குவரத்து விபத்தினைத் தடுக்கவும், பொது மக்களிடையே அறிக்கை, விளம்பரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
8. பெண்களைக் கேலி, கிண்டல் செய்தவர்களைக் கண்காணித்து அவர்களை நல்வழிப்படுத்துதல்.
9. இரவு நேர போக்குவரத்து விபத்தினைத் தடுக்க வாகன முகப்பு விளக்கின் மீது கருப்பு வண்ணம் பூசுதல்.
10. பண்டிகைகளின்போது விபத்துக்களைத் தடுக்க பொதுமக்களிடையே பத்தி ரிக்கை விளம்பரம், தொலைக்காட்சி மூலம், விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
11. போலியோ சொட்டுமருந்து முகாமை முன்னின்று நடத்துதல்.
12. அனைத்து பள்ளிகள், கல்லூரிகளில் போதை ஒழிப்பு விழிப்பு ணர்வு முகாம் நடத்துவதுடன், அதன் தீமைகளைக் குறித்து பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி நடத்தி ஊக்குவித்து, பரிசுகள் மற்றும் சான்றிதழ் களை வழங்குதல்.
13. பொதுமக்களிடையே தற்காப்பிற்காக இலவசமாக கராத்தே பயிற்சி, யோகா பயிற்சி அளித்தல்.
14. பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி அளித்து அரசு உதவிபெற ஆலோசனை வழங்குதல்.
15. படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு, கணினியுடன் அனைத்து சுயதொழில் பயிற்சி அளித்து சுய வேலைவாய்ப்பு தொழில் தொடங்க ஆலோசனை வழங்குதல்.
16. சுற்றுப்புற சூழல், சுகாதாரம் போன்றவைகளையும் இவற்றினால் ஏற்படக்கூடிய நன்மைகளையும், தீமைகளையும் பொது மக்களுக்கு எடுத்துரைத்தல்.
17. மருத்துவ வசதிகள் இல்லாத கிராமம் மற்றும் நகர்புறங்களில் மருத்துவ முகாம் நடத்தி கூடுமானவரையில் இலவசமாக மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்துகள் வழங்குதல்.
18. ஏழை – எளிய ஆதரவற்ற குழந்தைகளுக்கு படிக்க உதவி செய்தல்.
19. வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற மக்களையும், தீ விபத்தினால் பாதிக்கப்படுகின்றவர்களையும் காவல் துறை மற்றும் தீ அணைப்பு துறையுடன் இணைந்து காப்பாற்றி உதவி புரிதல்.
20. விதவைகளின் மறுவாழ்விற்கும் அவர்களின் முன்னேற்றத் திற்கும் உதவி புரிதல்.
21. குடும்ப நல திட்டத்தையும், வரதட்சணை ஒழிப்பு திட்டத் தையும் தீவிரமாக அமல் செய்து மக்கள் நலம்பெற உதவி செய்தல்.
22. கண்தானம், ரத்ததானம் போன்றவைகள் செய்தல் மற்றும் முகாம்கள் நடத்தி அதற்கான உறுப்பினர்களை சேர்க்கும் திட்டத்தை தீவிரப்படுத்தல்.
23. ஜாதிமத, இன வேறுபாடுகளை ஒழித்து மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல்.
24. ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவிகள் மற்றும் உடைகள் வழங்குதல்.
25. அத்தியாவசியப் பொருட்களை பதுக்கல் செய்வோரையும், உணவு பொருள்களின் கலப்படம் செய்வோரையும் அளவு களில் சரியான முறையில் விநியோகம் செய்யாதவர்களையும் கண்காணித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் காவல் துறைக்கும் தெரிவிப்பது.
26. நல்ல சமூக உறவாக மனித ஒற்றுமை, தேச ஒற்றுமை ஆகியவற் றிற்காக பாடுபடும் தலைவர்களையும், விளையாட்டு துறையில் வெற்றிபெறும் வீரர்களையும் கௌரவித்தல்.
27. மத்திய மாநில அரசுகள் மக்களுக்கு அறிவிக்கின்ற சலுகைகளை விளம்பரப்படுத்துதல்.
28. அரசு மருத்துவமனைகள் மற்றும் ரயில்வே ஸ்டேஷன் கூட்ட நெரிசல்களைக் கட்டுப்படுத்த உதவி புரிதல்.
29. செடி, மரக் கன்றுகள் வைத்து இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல்.
30. அரசு போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான இலவசப் பயிற்சி வகுப்புகளை நடத்தி ஆலோசனைகள் வழங்குதல்.
31. மாவட்ட விளையாட்டு சங்கத்துடன் இணைந்து விளை யாட்டை ஊக்குவித்து பரிசுகளை வழங்குதல்.
32. மழைநீர் சேகரிப்புக் குறித்து பிரச்சாரம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

# புதிய மனித சமுதாயம் மலரட்டும்!

மனிதர்களுக்குத்தானே சமுதாயம். உலகம் முழுவதும் மனிதர்கள்தானே! மனிதர்களுக்குள் தான் எத்தனை ஜாதி, மதம்? இது வேதனை தான், உறவுகள் பலவிதமாக இருக்க மனிதர்கள் மட்டும் இன பாகுபாட்டால் முரண்டு பிடிக்கலாமா? தாத்தா, பாட்டி, தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, மாமன், மைத்துனர், மைத்துனி, அண்ணி, பேரன், பேத்தி என உலகம் முழுவதும் உள்ள மனித இனம் சொந்தம் கொண்டாடி மகிழலாம். மொழியால், கலாச்சாரத்தால் வேண்டுதல் தெய்வ வழிபாட்டால் மட்டுமே வித்தியாசப் படலாம். மனித சமுதாயத்தில் மட்டும் ஏன் இத்தனை பாகுபாடு. உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை என்று பிறப்பில் இல்லை. சமுதாயக் குற்றமே இவ்வளவுக்கும் காரணம். ஒருங்கிணைந்த சமுதாயமாக மனிதர்கள் வாழ்ந்துவிட்டால் ஏன் இந்த போர்க் குணம், மனிதர்கள் அனைவருக்கும் அடிப்படை ஒன்றுதான். எல்லா மத வேதங்களும் அதர்மத்தை போதிக்கவில்லை. மனுதர்மத்தைத்தானே போதிக்கின்றது. மனிதனை மனிதனே வெறுக்கக் காரணம் என்ன? உழைக்கும் குணம் குறைந்து பொறாமை உணர்வுகளால் மனித நேயம் மறந்து, மனதளவில் தாழ்மை உணர்வுகளால் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மாறினால் சமுதாய பாகுபாடு அறவே ஒழிந்துவிடும். எங்கு வாழ்ந்தாலும் மனிதன் மனிதன்தான் என்ற உணர்வு வேண்டும். மனித சமுதாயம் வாழ்வதற்கே இயற்கை பலவிதமான வழிகளை



நமக்குத் தந்திருக்கிறது. இயற்கை ஜாதி, மத, இன, மொழி, பாகுபாடு பார்த்து எதையும் செய்வதில்லை. உறவுகள் மேம்பட்டு, உறவுகள் தழைத்து பாகுபாடற்ற புதிய மனித சமுதாயம் மலர்ந்து உலகம் முழுவதும் மனித இனம் இன்புற்று வாழ 2017 லிருந்தாவது வைராக்கியத்துடன் கூடிய உறுதி ஏற்று புதிய மனித சமுதாயம் மலரட்டும்.




**எஸ். கிருஷ்ணமூர்த்தி**
எண்.251, கல்யாணி இல்லம்,
செல்லப்பன் நகர்,
புதுக்கோட்டை - 622 001
செல் : 98428 51746



**கண்காணிப்பாளன்**

**மாத இதழ் ஆண்டு சந்தா மற்றும் நன்கொடையாக - 100/-**
**கண்காணிப்பாளன் மாத இதழுக்கு காசோலையாகவோ, அல்லது பணமாகவோ அனுப்பி சந்தாரார்களாக சேருங்கள்**
**அனுப்ப வேண்டிய முகவரி**
**எண். 352, சாமந்திப்பு காலனி, வியாசர்பாடி, சென்னை - 39**

# பிறந்து ஓராண்டாகியும் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் பெறாதவர்களுக்கு புது வாய்ப்பு

தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகள் மூலம்தான் பிறப்பு, இறப்பு சான்றிதழ வழங்கப் பட்டு வருகிறது. கடந்த 1990 க்கு பின் பிறந்தவர்களுக்கு பிறப்பு சான்றிதழ் கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளதால் தற்போது பிறப்பு சான்றிதழ் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று, இறந்தவரிடம் இருந்து சொத்துக்களை மாற்றி கொள்வதற்கு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இறப்பு சான்றிதழ் பதிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது.

பொதுவாக, பிறந்தோ, அல்லது இறந்தோ 1 வருடத்திற்குள் கிராம நிர்வாக அலுவலரிடம் பிறப்பு அல்லது இறப்பை பதிவு செய்யா விட்டால் நீதிமன்றத்தை நாடி அதற் கான ஆணை பெற்ற பிறகுதான் வரு வாய் கோட்டாட்சியர் நிலையிலான அதிகாரிகள் பிறப்பு சான்றிதழ் பதிவு செய்கின்றனர்.

இதனால், பொதுமக்கள் நீதி மன்றத்திற்கு நடையாய் நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பொது மக்களுக்கு வீண் அலைச்சலும், கால விரயமும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது மக்க ளிடம் இருந்து அரசுக்கு ஏராளமான புகார்கள் சென்றது. இதை தொடர்ந்து பொது சுகாதாரத்துறை தலைமை பதிவாளர் அனைத்து நகராட்சி நிர்வாக ஆணையர், டவுன் பஞ்சாயத்து இயக்குனர், கலெக்டர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் சட்ட விதி 3ன் கீழ் பிறப்பு இறப்பு 1 ஆண்டுக்குட்ள பதிவு செய் யாமல் விடப்பட்டாலும் வருவாய் கோட்டாட்சியர் நிலையிலான அதிகாரிகள் பதிவு செய்ய அதிகாரம் வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன் காரணமாக, இனி வருங்காலங்களில் 1 ஆண்டிற்கு பிறகு பிறப்பு இறப்பு சான்றிதழ் பெற பொதுமக்கள் அலைய வேண்டி யதில்லை என்ற நிலை உருவாகியுள் ளது.

இதுகுறித்து பெயர் வெளியிட விரும் பாதா வருவாத்துறை அதி காரி கூறும்போது, ஒரு வருடத்தில் பிறப்பு இறப்பு சான்றிதழ் பதிவு செய் யப்பட்டு, அந்த ஆவணங்கள் பதிவுத் துறைக்கு அனுப்ப வேண்டும். எங்க ளால் இந்த ஆவணங்களை பாதுகாக்க முடியுமே தவிர திருத்தம் மேற்கொள்ள கூடாது. ஒரு வருடத்தில் பதியாதவர் கள் நீதிமன்றத்தை அணுகி அதன்பிறகு வட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்கின்றனர். பொது மக்கள் 3 மாதங் கள் வரை நடையாய், நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது சட்ட திருத்தத்தால் கொண்டு வந்ததன் மூலம், பொது மக்கள் அலைய வேண்டிய தேவை யில்லை. வட்டாட்சியர் அலுவலகத்தி லேயே இனி பதிவு செய்ய முடியும். இதற்கான ஆவணங்களை அவர்கள் வட்டாட்சியர் முன்பு சமர்ப்பிக்க வேண்டும். இதற்கான விண்ணப்பங் களை வட்டாட்சியர் அலுவலங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

# திருநங்கைகளின் ஆசை

என்னுள் ஒரு எண்ணம்
என் ஆசைகள் ஆனந்தமாக வேண்டும்
எண்ணங்கள் ஏணி ஏற வேண்டும்
கனவுகள் நிறைவேறி கரை சேர வேண்டும்.

கலங்கி நிற்காமல்
கம்பீரமாய் வாழவேண்டும்
கண்ணீரை காணாத
காலங்கள் வேண்டும்

மகிழ்ச்சி என் மடியில்
சம்மனமிட வேண்டும்
சிரிப்பு எனக்கு
சிதறாமல், சிந்தாமல் வேண்டும்

அடக்குமுறைக்கு ஆளாகாமல்
நான் நானாக வாழ வேண்டும்
ஈவ் டீசிங் இல்லாத
இனிமையான எதிர்காலம் வேண்டும்

முன்னேற்றத்தை தடுக்காத
பெற்றோர்கள் வேண்டும்
மூட நம்பிக்கை யற்ற
நல்லவர்கள் வேண்டும்

சாதி மதம் பார்க்காத
சனங்கள் வேண்டும்
ஆண்களுக்கு அடிமையாகாத
வாழ்க்கை வேண்டும்

இவை அனைத்தும் சமுதாயப்
பார்வையில் சரித்திரம்
படைக்க வேண்டும்.

D. **விஜி** B.A.
செயலாளர்
விடிவெள்ளி
திருநங்கைகள்
நல வாழ்வு சங்கம்



**கண்காணிப்பாளன்**

ஆசிரியர் :
**இ.செல்வராஜ்**

முதன்மை காப்பாளர்
**P. ரேணுகோபால் I.A.S.** ஓய்வு

கௌரவ ஆசிரியர்கள்
**Ln. S. மோகன்**, B.A.,B.L.
**M.D. இளங்கோவன்** தாசில்தார் ஓய்வு

மருத்துவ கௌரவ ஆலோசகர்
பேரா.டாக்டர் **முத்துச் செல்லக்குமார்**
M.D.,(Int. Med.) DPSM, Dip.inDiabet,
FRSH,FCGP,FIACM,FIMSA

சட்ட ஆலோசகர்கள்
**M. தாமோதரன்**
Senior-Cent. Govt. Standing Cousel
**S, ஜேம்ஸ் ஜெகநாதன்**, M.A.,M.L.
பூவை. **இலா. ரமேஷ்** B.A., B.L.

ஆசிரியர் குழு
**A. ராமையன்**
**S. சாகுல்ஹமீது**

நிருபர்கள் :
**S. முஹம்மது ரபீக், J.திலக்குமார்**
**P.N. ராஜா, S. அப்துல் அஜிஸ்,**
**C.P.செந்தில்குமார்,**
**S.முஹம்மது ஷரிப்**
**S.அப்துல்ரகுமான்,**
**R.ரகோத்தம்மன்**
**S.சௌந்தர்ராஜன்,** சேலம்
**G.செந்தில்குமார்** புதுக்கோட்டை
**K.ஐய்யனார், P.K.குமார்**

தலைமை புகைப்பட நிருபர் :
**M.பழனி** BFA

வடிவமைப்பு
சீயோன் கிராஃபிக்ஸ் - 9884571053

எண்.352, சாமந்திபுரம், வியாசர்பாடி,
சென்னை – 39. செல் : 9444406321

கண்காணிப்பாளன் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும்
சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

# செல்லாத நோட்டு



கறுப்புப் பண முதலைகளை
கதி கலங்கடிக்கும் சாட்டை !
கள்ள நோட்டு பேர்வழியின்
கதை முடிக்கும் வேட்டை !

வரி ஏய்ப்பு செய்வோரை
வசமாக சிக்கவைக்கும் !
வாழ்வாதாரம் இல்லா ஏழைகளின்
வறுமைக்கும் முடிவு கட்டும் !

கேடு கெட்ட வேலைக்கெல்லாம்
கால் கடுக்க நிற்கின்றோம் !
நாடு தட்டுத் தடுமாறுகையில்
தோள் கொடுப்போம் என்றாலும் !

பொறுப்பிலுள்ளோர் சிலரின்
குறுக்குச்சால் ஓட்டத்தால் !
உருப்படியான இத்திட்டம் இன்று
உருக்குலைந்து உருமாறிப்போச்சு !

இருப்பிருந்தும் மக்கள்நிலை
இருண்ட பாலை வனமாச்சு !
இடைத்தரகர் திருவிளையாட்டால்
இயல்பு வாழ்க்கை தலைகீழாயிருச்சு !

கண்ணில் காசை காண்பதற்கு
கடுந்தவமிருந்தும் திண்டாட்டம் !
கட்டுக்கட்டாய் பணம் பதுக்கும்
கயவர்களின் கொண்டாட்டம் !

அவசரமாய் பை நிரப்பும்
அந்தரங்க பணப்பரி மாற்றம் !
அடுக்கடுக்காய் அரங்கேறும்
அசிங்கங்களின் உச்சக்கட்டம் !

வேலியே பயிரை மேயும்
வேலைகள் தானே தொடர்கிறது !
வெந்த புண்ணில் வேல் பாயும்
வேதனை எவருக்கும் புரிகிறது !

நாய் வாலை நிமிர்த்தத் துடிக்கும்
நல்ல முயற்சியை வரவேற்போம் !
நமக்கும் விடியல் வருமென்ற
நம்பிக்கையோடு காத்திருப்போம் !


கவிப்போராளி **க.சுகுமாறன்**




4031, பொன் நகர்,
அசோக் நகர் விரிவாக்கம்,
திருக்கட்டளை அஞ்சல்,
புதுக்கோட்டை - 622 303
செல்: 9443867387, 9486954801


## காலிங்கராயன்



ஈரோடு அருகே வடமுகம் வெள்ளோடு கிராமத்தில் விவசாயக் குடும்பதில்பிறந்தவர் லிங்கையன் (எ) காலிங்கராயன் மன்னர் வீரபாண்டியனின் படையில் சேர்ந்து படைத்தளபதியாக உயர்ந்தார். தன் ஆளுகைக் குட்பட்ட புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற வேண்டும் என்று திட்டமிடு நாட்டு மக்களின் உதவியுடன் காலிங்காராயன் அணையிணைக் கட்டி, கால்வாயினையும் வெட்டினார். இதன் மூலம் 740 ஆண்டுகளுக்கு முன்பே நதிகள் இணைப்புத் திட்டத்துக்கு பிள்ளையார் சுழி போட்டார் காலிங்கராயன்.





மாடு, கோழி, மீன்கள், உயிர் இனங்கள் நாம் சாப்பிட்டால் நமக்கு பாவம் கிடையாது. அதை கொலையுண்டு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு தான் பாவம். அதனால் நமக்கு கிடை யாது என்பார்கள். இதை பெருமை யோடு சொல்வார்கள். நாங்கள் சொல்கின்றோம், இறை உணர்வோடு சிந்தித்து பாருங்கள். நீங்கள் கறி மீன்கள் வேண்டும் என்று கேட்பதால் தானே அவர்கள் உயிர் கொலை செய்து உங்களுக்கு கொடுகின்றார்கள். அப்போது அந்த பாவம் அவர்களை சார்ந்திடுமா, அல்லது உங்களை சார்ந் திடுமா? உங்களை தானே சார்ந்திடும். அந்த பாவ கர்மா உங்கள் ஆத்மா

# அருள் பெரும் ஜோதி! அருள் பெரும் ஜோதி! தனிபெரும் கருணை! அரும்பெரும் ஜோதி!

எல்லா உயிர்கள் இடத்திலும் அன்பாய் இரு, எல்லா பயிர்களிளை யும் தன் உயிர் போல் இரக்கமும் கருணையும் காட்டு, அப்படி கருணை யோடு நாம் இருந்தால்தான் நம்மீது மிருகங்கள் ஆகட்டும், அல்லது மனிதர் களாகாட்டும் கருணையோடும் பாசத் தோடும் இருப்பார்கள்.

சிலர் அடுத்தவர் பொன் பொரு ளையும், அடுத்தவர் சுதந்திரத்தையும் பறிக்கின்றனர்.

அப்படி செய்யும்போது, தம் முடைய பொன்னும் பொருளும் விரையமாகும் இதை நாம் சிந்திப்பது கூட கிடையாது.

பலர் உணவுக்காக இந்தபூமியில் இயற்கையோடு, துள்ளி விளையாடும் உயிர் இனங்கள் மனித உணர்வுக்காக உயிர் கொலை செய்து சாப்பிடுவார் கள். அதுமிக பெரிய பாவம் அந்த பாவ கர்மவானது நம் ஆன்மாவை பற்றிக் கொள்கின்றது. மற்றும் நம்முடைய பாவ சுமைகளும் நம்மை தொடர்கின் றது. அது நமக்கு தெரிவது இல்லை. நம் மனதையும் சஞ்சல படுத்துகின்றன. இது எதனால் நமக்கு நடக்கின்றது என்று நாம் சிந்திப்பது இல்லை.

ஒரு சிலர் சொல்வார்கள் ஆடு,

வோடு தொடர்பு கொள்ளும். பிறகு அடுத்த பிறவியையும் தொடர்பு கொள் ளும். அத்துடன் சும்மாவிடாது. நீங்கள் ஆசையோடும், அன்போடும் வளர்த்து வரும் உங்கள் செல்ல குழந்தைகளின் ஆத்மாவோடும் தொடரும். தொடர் ந்து அவர்களுக்கு நோய்தாக்குதல் அவர்கள் வளர்ச்சியின் முன்னேற் றத்தை தடுத்தல் அவர்கள் வாழ்க்கை பெரிய சாதனை எதுவும் செய்ய முடி யாது. இப்படி இன்னும் பல எதிர்மறை யாக வேலைகள் செய்யும் தாய் தந்தை யர்களுக்கு சொல் பேச்சை கேட்ப தில்லை. சமுதாயத்திற்கு எதிர்மறை யான வேலைகள், அனைத்தும் செய்ய சொல்லும். அதனால்தான் நாம் வாழும் உயிர் இனங்களை கொன்று சாப்பிடு வது பாவம் நாம் சாப்பிட எத்த னையோ காய்கள், கீறைகள் தானிய வகைகள் பழ வகைகள் உள்ளன. அதை எல்லாம் தவிர்த்துவிட்டு நம்மை போல் வாழ நினைக்கின்ற உயிர் அதை கொன்று சாப்பிடலாமா? அந்த ஜீவன் கள் விடும் சாபம் நமக்கு பெரிய பாவம் இதை நீங்கள் வாழ் நாள் முழுவதும் நன்மையே நடக்கும். இத்த பாவ சுமைகளை நீக்கி என் மக்களை அனந்தமாக வாழ அருள்புரிய வேண்டும் இறைவா!

# செல்வச்செழிப்பான கிராமம்

இந்தியாவில் இருக்கும் கிராமங்களில் மிகவும் செல்வச் செழிப்பில் இருக்கும் பணக்கார கிராமம் மதாபர் நவவியாஸ் தான். இந்தக் கிராமம் குஜராத் மாநிலத்தில் உள்ள பூஜ்அஞ்சர் நெடுஞ்சாலைக்கு அருகில் 4 கி.மீ. தொலைவில் உள்ள புஜியோ மலைப்பகுதியில் அமைந்துள்ளது.

இந்தக் கிராமத்தின் மக்கள்தொகை 15 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. இந்தியாவின்மற்ற பகுதிகளில் கிராமத்தினர் ஊரைக் காலி செய்துவிட்டு நகரங்களை நோக்கி குடியேறிக் கொண்டிருக்கும்போது, இங்கோ மற்ற நகரங்களில் இருந்து இந்த கிராமத்தை நோக்கி மக்கள் வருகிறார்கள்.

இங்கு மூன்று மாடிகளுக்கு குறைவான வீட்டையோ, கடையையோ பார்க்க முடியாது. மின்சாரமும் தண்ணீரும் 24 மணி நேரமும் தங்குதடையின்றி கிடைக்கிறது. உலகத்தரம் வாய்ந்த மெட்ரிக் பள்ளி, சிறப்பு வசதி பெற்ற சுகாதார மையம், மிகப் பெரிய கோவில் எல்லாம் இங்கு உண்டு.

இந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் லேவா படேல் என்ற வணிக சமூகத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் வணிகத்தில் சிறந்து விளங்குபவர்கள். இவர்களின் தொழில் நேர்த்திக்கும், பொருளாதார வெற்றிக்கும் அடையாளமாக இந்த கிராமம் உள்ளது.

இவர்கள் சுமார் 400 வருடங்களுக்கு முன்பு சவுராஷ்டிரா பகுதியில் இருந்து கட்ச் பகுதிக்கு இடம் பெயர்ந்தார்கள். 1800 களில் கடல் கடந்து வணிகம் இவர்களுக்கு கைகொடுத்தது. கிழக்கு ஆப்பிரிக்காவுக்கு வியாபாரிகளாகவும், கொத்தடிமைகளாகவும், தச்சர்களாகவும், கூலி ஆட்களாகவும் சென்றனர்.

மேலும் தான்சானியாலவில் உள்ள சான்சிநபாரில் நிரந்தரமாக குடி ஏறினர். மேலும், சோமாலியா, உகாண்டா, காங்கே, ரூவாண்டா ஆகிய நாடுகளிலும் குடியேறினார்கள். 1960 களில் அங்கிருந்து இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற இடங்களுக்கு புலம் பெயர்ந்தனர். இப்படி குடியேறிய அனைவரும் தங்கள் தாய் மண்ணான மூதாதையர் கிராமங்களுடன் தொடர்பில் இருந்தனர். அந்த கிராமங்களில் ஒன்றுதான் மதாபர்.

1990 களின் தொடக்கத்தில் மேற்கூறிய நாடுகளிலிருந்து லேவா படேல்கள் தங்கள் பூர்வீக இடங்களக்கு திரும்ப நினைத்தனர். அப்படி திரும்பிய அவர்கள் பழைய கிராமத்திற்கு அருகிலேயே இந்த புதிய கிராமத்தை உருவாக்கினார்கள். இந்தக் கிராமத்தில் வாழ்பவர்களின் 60 சதவீதத்தினர் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்.



இந்த சின்ன கிராமத்தில் 17 வங்கிகள் உள்ளன. தனியார், தேசிய வங்கிகள் அனைத்தும தங்களின் கிளைகளை இங்கே வைத்துள்ளன. 2005 ம் ஆண்டில் இந்த வங்கிகள் வெளியிட்ட கணக்கின்படி 2 ஆயிரம் கோடி ரூபாயை இந்த கிராமத்தினர் சேமிப்பு கணக்கில் போட்டு வைத்துள்ளனர். இங்கு ஒரு தனி நபரின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.13 லட்சமாக உள்ளது. இங்கு சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்கள் குறைந்தபட்சம் 20 லட்சம் ரூபாயை வங்கி இருப்பாக வைத்துள்ளார்கள்.

இதுபோக இவர்கள் ஆண்டுதோறும் 10 முதல் 15 கோடி ரூபாயை நிரந்தர வைப்பு நிதியில் போட்டு வைத்துள்ளார்கள். இங்கு நிலத்தின் மதிப்பும் அதிகம். ஒரு சதுர மீட்டர் 35 ஆயிரம் ரூபாய். அரசு இலவசமாக கொடுக்கும் எதையும் இந்த மக்கள் வாங்குவதில்லை. இலவசம் இவர்களுக்கு பிடிப்பதில்லை. அவ்வளவு செல்வச் செழிப்பு.



# “மக்களால் நான் மக்களுக்காகவே நான்”

## 69ம் ஆண்டு பிறந்த நாள் 24.2.2017

**வெ**ற்றியின் மறுவுருவம் “அம்மா” என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் என்று சொன்னால் அதுமிகையாகாது.

ஜெ. ஜெயலலிதா அவர்கள், தனது பள்ளிப்பருவம் முதலே புத்தி கூர்மைமிக்கவர். அறிவு சம்பந்தப் பட்ட துறை, துணிவு, அசைக்க முடியாத நம்பிக்கை, தான் பொறுப்பேற்ற அனைத்து துறைகளிலும் வெற்றியடைய வேண்டும் என்ற மன உறுதி, அதிக பொறுப்பு விடாமுயற்சி வெற்றிக்குத் தேவையான வழிமுறைகள் ஆகியவற்றை மிகத்தெளிவாக புரிந்து கொண்டு அதன்படி செயல் பட்டு பொது வாழ்க்கையில் ஈடுபட்டு அதில் வெற்றிக்கண்டார்.



**இ.ராஜகோபால்,** எம்.ஏ.,
டெபுடி ஏரியா கமாண்டர் (ஓய்வு)
(சென்னை ஊர்க்காவல் படை)

ஆரம்பகால முதலே செல்வ செழிப்பில் வளர்ந்தவர். பற்றி படிப்பில் மிகச்சிறந்த மாணவியாக திகழ்ந்தார். பின்பு கலைத் துறையில் ஈடுபட்டு, அதில் தனக்கென ஒரு முத்திரையை பதித்தார். தமிழக மக்களின் முன்னேற் றத்திற்காக பல திட்டங்களை தீட்டி னார். அதில் வெற்றியும் கண்டார்.

எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி என்ற வெற்றித்தாயின் அருளாள் தன்னிகரற்று விளங்கினார். தனது வாழ்க்கையில் அதிகம் போராடி, மிகச் துணிச்சலுடன், அதிகமான தைரியத்துடன் போராடி வெற்றி கண்டவர். அனைவரின் நெஞ்சங்களி லும் நீங்காத இடம் பெற்றுள்ளார். அனைவராலும் பாராட்டபடும் தலைவியாக திகழ்ந்தார். இந்த சிறப்பு எல்லோருக்கும் கிடைத்து விடாது. லட்சத்தில், கோடியில் ஒருவருக்கு தான் இப்படிப்பட்ட புகழ் கிடைக்கும்.

இவர் தனது வாழ்க்கையில் பல சவால்களை தன்னந் தனியாக எதிர்த்து போராடி வெற்றி கண்டார். எதற்கும் பயப்படாமல் அதிக திறமையுடன் செயல்பட்டவர். தனது அதிகாரத்தை வைத்து பொது மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளை செய்துள்ளார்.

முதலமைச்சர்களிலேயே தனக் கென ஒரு முத்திரையை பதித்த வர். இவருடைய செயல் பாட்டை எதிர்கட்சியினரும் பாராட்டியுள்ளார்கள். இப்படிப்பட்ட ஒருசிறப்பு மறைந்த தமிழக முதல்வர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைத் தவிர வேறு யாருக்கும் கிடைக்கவில்லை.

மறைந்த புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்துக்கு காவிரி நீரை உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் மூலம்

அரசு ஆணையாக பிறப்பிக்கப்பட்டு தனி சாதனையை படைத்தார்.

ஜெ.ஜெயலலிதா அவர்கள், பொதுமேடையில் பேசும்போது "மக்களால் நான் மக்களுக்காகவே நான்" என்ற வார்த்தையால் அனைவரின் மனதிலும் நீங்காத இடம் பிடித்துள்ளார்.

பிறந்தோம், வளர்ந்தோம் மடிந்தோம் என்று இல்லாமல், பிறந்தோம் நன்றாக வாழ்ந்தோம், சாதனைகள் பல செய்தோம் போன்ற மிகச் சரியான செயல்களை சாதனைகளை இவருடைய வாழ்க்கையில் செய்துகாட்டி தமிழக மக்கள் எல்லோருடைய நெஞ்சங்களில் தனக்கென ஒரு இடத்தை பிடித்தார். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். பொதுவாக சாதனைகளின் மறுவுருவம் "அம்மா" என்றால் மிக நன்றாக பொருந்தும்.



# பதினாறு வழிகளில் பயிராகும் உடல்நலம்!

**நாவேந்தன் முருகேசன்**

| | |
|---|---|
| முதல் வழி | - உடற்பயிற்சி |
| இரண்டாம் வழி | - யோகா |
| மூன்றாம் வழி | - தியானம் |
| நான்காம் வழி | - தலை முதல் கால் வரை தன் சுத்தம் காத்தல் |
| ஐந்தாம் வழி | - பல் சுத்தம் பேணுதல் |
| ஆறாம் வழி | - சரியான தூக்கம், சாந்தமான மனநிலை. |
| ஏழாம் வழி | - சிறு தானியங்களை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுதல் |
| எட்டாம் வழி | - பச்சைக் கீரை காய்கறிகளை பார்த்துண்ணுதல். |
| ஒன்பதாம் வழி | - பப்பாளி, கொய்யா, பிஞ்சி வெள்ளெரிக்காய், பாதுகாப்பானவை, சாப்பிடலாம். |
| பத்தாம் வழி | - நார்ச்சத்து மிகுந்த உணவை நாடி உண்ணுதல் |
| பதினொன்றாம் வழி | - சர்க்கரை, உப்பு, கிழங்கு வகைகள் ஆகியவற்றை குறைவாகவே உணவில் சேர்த்துக் கொள்ளுதல். |
| பன்னிரண்டாம் வழி | - எண்ணெயால் வறுத்த, பொறித்த உணவுகள், வெண்ணெய், நெய் ஆகியவற்றை உணவில் அளவோடு சேர்த்துக் கொள்ளுதல், அவித்த உணவையே அதிகம் உண்ணுதல். |
| பதின்மூன்றாம் வழி | - மனப்பதற்றம், மன உளைச்சல் கிட்டே வராமல் பார்த்துக் கொள்ளுதல் |
| பதினான்காம் வழி | - ஒவ்வொரு நிமிடமும் உவகை உளமுடன் உற்சாகமாக வாழ்தல். |
| பதினைந்தாம் வழி | - புகை, மது, பொடி புறம் தள்ளி ஒதுக்குதல் மற்றும் தகாத உறவைத் தவிர்த்தல். |
| பதினாறாம் வழி | - மனித நேயமுடன் மற்றவர்களிடம் அன்பாகப் பேசிப் பழகினால் மனம் மகிழ்ந்து நலம் பெருகும். |

இந்தப் பதினாறு வழிகளைக் கடைபிடித்தால், இனிய உடல் நலம் என்னாளும் நம் கையில்! நல்லதே நடக்கும்!

இன்றைய காலகட்டத்திலும், ஏன் எதிர்காலத்திலும் கூட உலகத்திற்கு அதிசயப் பொருளாகக் காட்சிதரப் போவது எது? அது ஒன்றும் புதிரில்லை. நம் அன்னை பாரதம்தான்!

மனித மாண்பில் இயற்கையும், இயற்கையோடு இயைந்த



வியப்பின் உச்சம்.

அணுவையும், அற்ப ஆயுதங்களையும் கைக் கொண்டு, அதிகார ஆணவ வெறியால், கண்டங்களைப் புவியோட்டை ஆட்டிப் படைக்கத் துணிந்தோர் பூகோளப் பந்தையே சுடுகாடாக்கி, பூக்கள் பூத்துக் குலுங்கிய பூஞ்சோலைகளையும், எழில் கொஞ்சிய வளங்களையும் அழித்து, இரத்த வெறிபிடித்த மிருகமென அலைந்து, விழிநோக்கும் திக்கெல்லாம் இலட்சோப இலட்ச மனித உயிர்களைக் குடித்து, மனித

# நெஞ்சு பொறுக்குதில்லையே....



மகோன்னத பண்பாட்டின் உறைவிடமாகவும், கலைகளின் பிறப்பிடமாகவும் விளங்கும் பழங்கீர்த்தி கொண்ட நாடு.

ஆன்மாவின் அமரத்துவம், எங்கும் எதிலும் ஆட்சி புரிகின்ற இறையருட்சக்தி ஆண்டவனின் அருட்செல்வம் அடியார்களிடத்தே என்னும் அமரத் தத்துவத்தைமானுடம் செழிக்க, உலகம் தழைக்க மண்ணுலகில் அன்பை மெய்ப்பித்து வரும் மேலோர் பூமி.

சித்தாந்தங்கள், வேதாந்தங்கள், வாழ்வியல் தத்துவங்கள், அறிவியலார்ந்த கண்டுபிடிப்புகள், பிரபஞ்சம் பற்றிய உண்மைகளை முதன் முதலாக உலகிற்கு எடுத்துக்கூறிய புண்ணிய தேசம்.

நலிந்துக் கொண்டிருக்கிற மானுடச் சமுதாயத்திற்கு நம்பிக்கையையும், புதிய உத்வேகத்தையும் ஊட்டி, உலகளவில் இன்று வெகுவாகப் பரவியுள்ள, ஜனநாயகம் மற்றும் சுயாட்சி முறை போன்ற பலவற்றிற்கும் வழிகாட்டிய தாய்பூமி பாரதமே அகிலத்தை மெய்ச்சிலிர்க்க வைக்கும்

உடல்களிலிருந்து பெருக்கெடுத்த குருதி வெள்ளத்தின் மீது நின்று கொக்கரித்தவர்கள். வெட்கித் தலைகுனிந்து, தாம் செய்த பாவங்களுக்காய்ப் பணிந்து மண்டியிட்டதும் சாப விமோசனம் தேட விழைந்ததும், அன்பிற்கினிய பாரதம் அருட்கொடையென உவந்தளித்த அகிம்சை மற்றும் ஜீவகாருண்ய ஈர்ப்பால் தான் என்பது உலக மாந்தர்களுக்கு நன்றாகத் தெரியும்.

இத்தகு புண்ணிய, பெருமைமிக்க தேசம், தம் வளங்களின் செல்வங்களின் மிதமிஞ்சிய கொழிப்பால் பொன்னொளிர் பாரதமாக மின்னியது. இதன்

காரணமாகவே அந்நியர்களின் நூற்று க்கணக்கான படைபெடுப்புகளைச் சந்தித்திருக்கின்றது.

உலகின் அரிதான பொக்கிஷங் களை செல்வ நிலைகளைச் சொந்த மெனக் கொண்டிருந்த செல்வ வள பூமி, அவைகளைப் படையெடுத்தவர் களிடம் இழந்தும் உள்ளது என்பது உண்மைதான் எனினும், அதன் வளம் குறையாமல் வலிமை குன்றாமல், மீண்டும், மீண்டும் முன்பைவிட பன் மடங்கு வீரியத்துடன் உலகின் முத லாய் விஸ்ரூபம் கொண்டு விண்ணை முட்ட எழுந்துவிட்ட மாமலைபோல் வீறுகொண்டு நம் அன்னை பாரதம் விழித்து எழுந்ததென்றால் அதன் அத் தனைப் புகழும் அவள் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வர்களைத் தானே சாரும்.

அத்தகு அன்னையின் புகழை உலகார்ந்தப் பெருமையை சொந்தம் கொண்டாடும் பிள்ளைகள் இன்று எவ்வாறு இருக்கின்றார்கள்?

அவர்கள் பொதுநலம் அரசியல், தேசப்பற்று, தியாகம், தொண்டு தாய் நாட்டிற்காக ஆற்றும் கடமை, தம் பெருமைமிக்க தேசத்தின் வரலாற் றைப் போற்றுதல் போன்ற துறைகளில் எந்த நிலையில் இருக்கின்றார்கள்? என்ற கேள்விக்கு பதில் வெற்றாக உள்ளது என்பதை மறுக்க இயலாது.

பழம் பெருமை கொண்ட நாட்டின் மக்கள், நாடு காக்கத் தம்முயிர் உயிர் தந்த தியாகிகளின் வரலாற்றை, தேசிய இலட்சியங்களை அவமதிப்புக்கு ஆளாக்கி உதாசீனப் படுத்துவது,

நாட்டில் சுயநலமும் அதிகார வெறி யும், தனிமனித துதிபாடலும் பெருக பொறுப்பற்று கேளிக்கை நிலைகளில் மூழ்கித் திளைப்பது உண்மையில் நம்மை அதிர்ச்சியடையச் செய்கிறது. இது அந்நிய புறச்சக்திகள் நம் தேசத் துள் ஊடுருவ வழியமைத்துவிடுமோ என அச்சம் கொள்ளவும் செய்கிறது.

இதன் தொடர்ச்சி, பொறுப்பற்ற குடிமக்களின் விழிப்பின்மை அந்நிய மோகம் அநாகரிக கலாச்சார/ முறை யற்ற வாழ்க்கைமுறை, எல்லாத் துறைக ளிலும் ஒழுக்கமின்மை இந்த நிகழ்வு கள் நம் நாட்டின் எதிர்காலத்தை எங்கு கொண்டு சேர்க்குமோ? நல்லோர் களின் இதயத்துள் கவலை நிரம்பி விட்டது.


அரசியல் துறையில் ஆள்வோர்கள் மத்தியில் ஊழலும் லஞ்சமும் மலிந்து விட்டது. அதிகாரவெறியும், சொத்தா சையும் பேயாட்டம் ஆடுகிறது. இங்கு எந்த ஒரு துறையை எடுத்துக் கொண்டாலும் தூய்மையாய் இல்லை. வருவாய்த் துறையில் வாய்மைக்கு மதிப்பில்லை. தொலைக்காட்சி மற்றும் ஊடகத் துறையில் அசிங்கங்கள் வெட்கமின்றி அரங்கேறுகின்றன.

ஒருவன் பொருளிழந்தால் அது இழப்பில்லை. மீண்டும் கிடைக்கலாம். ஒழுக்கமிழந்தால் என்னவென்பது

நாளுக்கொரு விலையேற்றம் மக்க ளின் அடிப்படை வாழ்வையே ஆட்டிப்படைக்கும் கொடுமைகளி னூடே நம் நாட்டின் அரசியல் துறை யின் அஸ்திவாரம் தர்மத்தின் கீழ்நின்று தான் ஆளுமைச் செய்கிதா? சுரண்டல் காரர்களின் பணமுதலைகளின் பேயாட்ட உச்சநிலை இது தானா? என எண்ணவும் தோன்று கிறது.

தொடரும்....

**இளைஞர் இந்தியா, செந்தமிழ்த்தாசன்**



# தவறான உணவுப் பழக்கங்களும் மூட நம்பிக்கைகளும்!

உணவுப் பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் அந்தந்த இடங்களில் நிலவுகின்ற மக்களின் நம்பிக்கை, அவர்களின் எண்ணங்கள், அவர்களின் முன்னோர்கள் பயன்படுத்தி வந்த உணவுகள் முதலியவற்ன் அடிப்படையில் உள்ளதாக அமைகின்றன. வாழும் சமூக அமைப்புகள், கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் உணவு அமைந்திருந்தாலும் பல்வேறு படிப்பு, பொருளாதாரம் ஆகியவையும் உணவுப் பழக்கவழக்கங்களில் பெரும் பங்கு வகிக்கின்றன.

பொதுவாக நம்மில் பலர் சில வகையான உணவுகளை மிகவும் சூடானது என்றும், சில வகை உணவுகள் மிகவும் குளிர்ச்சியானவை என்றும் கருதப்படுகின்றன. இந்த அடிப்படையில் மாம்பழம், வெல்லம், கோழி, இறைச்சி, மீன், பப்பாளி, காப்பி ஆகியவை மிகவும் சூடான உணவுகளாகக் கருதப்படுகின்றன. இப்படி மிகவும் சூடான உணவுகளை உண்பதால் உடலில் கட்டிகள் ஏற்படுமெனக் கருதப்படுகிறது. இதேபோன்று தயிர், மோர், வெள்ளரிக்காய், வெண்ணெய், பழங்கள், ஆகியவை மிகவும் குளிர்ச்சியான உணவு வகைகள் என்று கருதப்படுகிறது.



பேராசிரியர்
டாக்டர் எஸ். முத்துசெல்லக்குமார் எம்.டி.

வயிற்றுப் போக்கு போன்ற நோய்களுக்கு மிகவும் குளிர்ச்சியான உணவு தரப்படுகிறது. தோல் நோய் உள்ளவர்களுக்குச் சூடான உணவுகள் தவிர்க்கப்படுகின்றன.

அரிசி வகை உணவுகள் கோதுமை உணவை விட எளிதில் ஜீரணமாகக் கூடியது என்று கருதப்படுகிறது. அதே போன்றே கோதுமை மிகவும் சக்தி அளிக்கும் உணவாக நினைக்கப்படுகிறது.

பாலுடன் சேர்த்து மீனையும் சாப்பிட்டு வந்தால் தோலில் குறிப்பாக.. முகத்திலும், நெஞ்சுப் பகுதிகளிலும் வெள்ளைப் புள்ளிகள் தோன்றுமென கருதப்படுகிறது.

அதிக அளவு பால் குடித்தால்



கர்ப்பிணிகளின் கர்ப்பப் பையில் வளருகின்ற குழந்தை பெரிதாக இருக்குமெனக் கருதப்படுகிறது. இதனால், பிரவசத்தில் பிரச்சனை ஏற்படுமெனப் பயப்படுகிறார்கள்.

பப்பாளிப் பழம் சாப்பிட்டால் அது கருச்சிதைவை ஏற்படுத்திவிடும் என்ற பயம் இன்னும் பலரிடத்தில் இருக்கிறது. குழந்தைகளுக்குப் பால் தரும் தாய்மார்களுக்கு அதிக அளவு சக்தியும் அதைத் தருவதற்காக உணவும் தேவைப்படுகிறது. ஆனால், இதை யாரும் ஊக்குவிப்பதில்லை.

வெள்ளைப்பூண்டை அதிகமாகச் சாப்பிட்டால் அது அதிகமாக பாலைச் சுரக்கச் செய்வதாக கருதப் படுவதுடன், விரைவில் கர்ப்பமடைவதைத் தடுப்பதற்காகவும் கருதப்படுகிறது.

எருமை மாட்டுப் பாலைக் குழந்தைகளுக்குத் தருவது அவர்கள் மந்தமாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

தாய் தன்னுடைய 'சீம்பாலை' குழந்தைகளுக்குத் தருவது இல்லை. மஞ்சள் நிறத்துடன் முதலில் சுரக்கும் இந்த பாலில் அதிக அளவு வைட்டமின் ஏ நிறைந்திருக்கும். அதில் குழந்தையின்

உடலுக்கு எதிர்ப்புச் சக்தியைத் தருகின்ற புரதமும் (தடைகாப்புப் புரதங்கள்) அதிகமாக இருக்கும். இவை, பல்வேறு நோய்களை எளிதில் விரட்டியடிக்கின்றன.

இதேபோன்றே பசுவின் சீம்பால் மற்றும் எருமை மாட்டின் சீம்பால் ஆகியவை நிராகரிக்கப் படுகின்றன.

குழந்தைகளுக்குப் பாலை நிறுத்தி விட்டு பிறகு உணவுகளைக் கொடுத்து வரும்போது பலரும் பருப்பு வகைகளைக் கொடுப்பதில்லை. பருப்பு வகைகள் வாயுவை உண்டாக்குவதாகக் கருதப்படுகிறது.

பொதுவாக நமது நாட்டில் வேலை வாய்ப்பு இல்லாமை, வறுமை ஆகியவை பல்வேறு உணவுப் பற்றாக்குறையினை உண்டாக்கிய போதும் இன்றும் மாறாமல் மறையாமல் நிலவுகின்ற பல்வேறு தேவையற்ற பழக்கவழக்கங்கள், மூட நம்பிக்கைகள் பிற்போக்கான சம்பிரதாய, சமுதாய வழக்கங்களால் மக்கள் சத்தான உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான உணவு வகைகளை உண்ணாமல் பல்வேறு நோய்களுக்கும் ஆளாகி வருகிறார்கள்.

இதேபோன்று, இனிப்பான உணவுகளால் சர்க்கரைச் சத்து இரத்தத்தில் அதிகமாவதால் கசப்பான பல்வேறு உணவுகளையும் உட்கொண்டால் சர்க்கரை வியாதி குணமாகுமெனக் கருதுகிறார்கள்.

இதன் பயனாக, வேப்பிலையினை அரைத்து அதன் நீரை, ஜூஸாக சிலர் அதிகாலையில் குடிக்கிறார்கள். இதனால் நோய் குணமாவதில்லை. இதேபோல, கசப்பான பாகற்காயும் சாப்பிடுகிறார்கள். இதில் வைட்டமின் சி அதிகமாக இருக்கும். இது உடலுக்கு நோய் எதிர்ப்புத் தன்மையை வழங்குகிறது. அதனால், பல்வேறு நோய்க் கிருமிகளும் உடலைப் பாதிப்பது குறையுமே தவிர, சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த இது உதவாது.

இன்று எந்த நோய்க்காக மருத்துவரிடம் சென்றாலும் அவரின் ஆலோசனையைப் பெற்ற பிறகு சிகிச்சை முடித்த பிறகு மருத்துவர் சொல்கிறாரோ இல்லையோ நாமே கேட்டு விடுகிறோம். இந்த நோய்க்கு என்ன உணவு சாப்பிட வேண்டும். எதையெல்லாம் தவிர்க்க வேண்டும்? எதையெல்லாம் தொடக் கூடாது? என்று உணவிற்கும் உடலில் ஏற்படும் நோய்களுக்கும் தொடர்பு உண்டு. அதேபோன்றே நேரத்திற்கு கடைப்பிடிக்கும் உணவு முறைகள் சக்தியை அளிக்கின்ற அதேவேளை நோய் விரைவில் அகலவும் உதவுகின்றன.



## சக்தி வாய்ந்த சாதனை!

*ஜல்லிக்கட்டுக்கான போராட்டத்தை நடத்தி தமிழக இளைஞர்களும், மாணவர்களும் உலகத்துக்கே வழிகாட்டியாக மாறிவிட்டனர் என இசையமைப்பாளர் இளையராஜா கூறியுள்ளார்.*

*ஒரு தலைவன் இல்லாமல், கட்சி துணை இல்லாமல், இயக்கங்கள் சாராமல் அப்படியே யாரும் வந்தால் அவர்களை வரக்கூடாது என்று தடை செய்துவிட்டு நடத்தும் இந்த போராட்டம் இளைஞர்களின் தன்னம்பிக்கையை காட்டுகிறது. மாணவர்கள், இளைஞர்களாகிய நீங்கள் இந்த தன்னம்பிக்கையால் உலகத்துக்கே வழிகாட்டியாக மாறிவிட்டீர்கள். அந்த அளவுக்கு ஒரு உத்வேகம். உங்களுக்குள் பதுங்கி கிடந்திருக்கிறது. அது இப்போது வெளியே வந்திருக்கிறது. ஒற்றுமையான உணர்வுதான் உங்களுக்கு மிகப்பெரிய வெற்றியை கொடுக்கும். அதை மட்டுப் படுத்தும் வகையிலும், திசை திருப்பும் வகையிலும், யாராவது ஏதாவது சொல்லலாம். அதையெல்லாம் நீங்கள் பொருட் படுத்தமாட்டீர்கள் என்பது உங்களின் உணர்வுப்பூர்வமான போராட்டத்தின் வாயிலாகவே தெரிகிறது. தொடர்ந்து இப்படி ஒன்றாக நிற்பது தொடரட்டும். சக்தி வாய்ந்த மிகப்பெரிய சாதனை இது.*

# 15 வயது பூர்த்தியானவர்களுக்கு மறு ஆதார் பதிவு கட்டாயம்




ஆதார் எண் பெற்றுள்ள 15 வயது பூர்த்தியான நபர்கள், தங்களது கைரேகை, கருவிழி பதிவு போன்ற பயோமெட்ரிக் தகவல்களை, ஆதார் நிரந்தர சேர்க்கை மையங்களுக்கு, நேரில் சென்று, அளிக்க வேண்டும் என அரசு கேபிள், டிவி மேலாண் இயக்குனர், குமர குருபரன் தெரிவித்து உள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த பொது மக்களுக்கு, ஆதார் எண் வழங்க, தமிழகம் முழுவதும் 545 நிரந்தர சேர்க்கை மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இவற்றை தமிழ்நாடு அரசு கேபிள் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் நிர்வகித்து வருகின்றன.

இம் மையங்களில், அக்.1 முதல் டிச.31 வரை 9.91 லட்சம் பேருக்கு ஆதார் எண்ணிற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

மத்திய அரசு வெளியிட்ட, ஆதார் சேர்க்கை விதி முறைகளின்படி, ஆதார் எண் பெற்றுள்ள, 15 வயது பூர்த்தியான நபர்கள், தங்களது பயோமெட்ரிக் தகவல்களை, 15 வயது பூர்த்தியடைந்த நாளில் இருந்து, இரு ஆண்டுகளுக்குள், மீண்டும் கட்டாயமாக அளிக்க வேண்டும்.

எனவே, நிரந்தர சேர்க்கை மையங்களில் 15 வயது பூர்த்தியான நபர்கள், தங்களுடைய பயோமெட்ரிக் தகவல்களை அளிக்கலாம். இதற்கு கட்டணம் எதுவும் கிடையாது.

## குடிநீர் தட்டுப்பாடு புகார் தெரிவிக்க தொலைபேசி எண்

காஞ்சிபுரம் மாவட்ட கிராமப் புறங்களில் குடிநீர் தட்டுப்பாடு மற்றும் விநியோகத்தில் குறைபாடு இருந்தால் அதுகுறித்த புகார்களைத் தெரிவிக்க மாவட்ட நிர்வாகம் தொலைபேசி எண் களை வெளியிட்டுள்ளது. பொது மக்கள் புகார்களைத் தெரிவிக்க 044-27238870, 9442571882, 7402606091, 7397562972 ஆகிய தொலைபேசி எண்கள் வெளியிடப்பட்டுள்ளது. ஒன்றிய அளவில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால், கிராமப்பகுதி பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள குடிநீர் பிரச்சனைகள் குறித்து, குறுஞ்செய்தி மற்றும் வாட்ஸ் ஆப் மூலம் புகார் தெரிவிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளது.

**கண்காணிப்பாளன்**
மாதஇதழ்

எண்.352, சாமந்திபூ காலனி,
வியாசர்பாடி, சென்னை - 600 039
செல் : 9444406321 , 9884199387

**வங்கி விவரங்கள்**

| | |
|---|---|
| வங்கி | - Purasawalkam Co-operative Bank Ltd |
| கிளை | - MKB Nagar |
| எண் | - 34103020000106 |
| கணக்கு | - Current Account |
| தலைப்பு | - Kankanippaalan |
| மின்னஞ்சல் | - kkpnmagazine@gmail.com |

# வாஸ்து சாஸ்திரம்

அன்பர்களே, இந்த இதழில் வர்ணம் தீட்டுதல் பற்றிக் காண்போம்.

என்னதான் பொறியாளர்கள் வித்தியசமான தோற்றல்களில் கட்டிடங்ளை கட்டினாலும் அதை அழகுபடுத்து மேலும் மெருகுஏற்றுவது வர்ணம்தான்.

வீடு கட்டி முடித்து கடைசியாக கலர் அடிப்பது அந்த வீட்டின் உரிமையாளரின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்றே கூறலாம்.

ஏனென்றால் நாம் தூங்கி எழும்போது புத்துணர்ச்சி உடன் எழுந்திருப்பதற்கு அந்த வீட்டின் வர்ணமும் முக்கிய பங்கு வகிக்கிறது.

தீய எண்ணங்கள் விலகி நல்ல எண்ணங்களை தோற்றுவிப்பதும் இந்த வர்ணங்களே!

இதில் வெள்ளை நிறம் - சந்திரன், சந்திரன் மனோகாரகன். எனவே, வெள்ளை நிறம் நம் மனதில் ஒருவித அமைதியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும்.



Er. G. செந்தில்குமார்
ஸ்ரீராகவேந்திரா பில்டர்ஸ்
புதுக்கோட்டை,
செல் : 9443401807

நம் வீட்டின் உள்ளே வர்ணம் கொடுக்கும்போது ஒவ்வொரு ரூமிற்கும் ஒவ்வொரு வர்ணம் அடிப்பது வெவ்வேறு விதமான எண்ண அதிர்வுகளை உண்டாக்கும்.



உதாரணமாக நமது முன்னோர்கள் வீட்டின் முகப்பில் மஞ்சக் காவி அடித்திருப்பார்கள். அதனால் அந்த வீட்டில் சுப நிகழ்ச்சிகள் தடையிருக்காது. இதனால் தான் இன்றளவும் சில பொறியாளர்கள் ஐவரி கலர் அடிக்கின்றனர். இதனால் மனநிறைவும் கட்டிடத்தின் பொளிவும் கூடுகிறது.

எந்த ராசிக்காரர்கள் எந்த கலர் அடிப்பது சிறந்தது என்பதைக் காண்போம்

மேஷம் - செர்ரி ரெட், லைட் ரோஸ்

ரிஷபம் - ஐவரி அல்லது சந்தனக்கலர்

மிதுனம் - பச்சை வர்ணம், ஐவரி

கடகம் - ஐவரி அல்லது பிரௌன்

சிம்மம் - பிங்க்

கன்னி - ஊதா வர்ணம், பச்சை வர்ணம்

வாழ்க வைகயம், வாழ்க வளமுடன்

# பள்ளிகொண்டா பகுதி அணைக்கட்டு - புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம்



# பள்ளிகொண்டா பகுதி அணைக்கட்டு – புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம்



















Owned & Published by E. Selvaraj from No.352, Sammanthipuram, Vyasarpadi, Chennai - 600 039, and Printed by R. Gani (N. Rowthargani), at Fine Offset Prints, No. 15, Seven Wells Street, Ch - 600 001, Editor E. Selvaraj, Cell : 94444 06321

Registered with Registrar of News Paper of India Under No. TNTAM/2002/7759
R.Dis.No. 876/07 Posted at Egmore RMS/R.No. TN/CCN/334/2017-2019.
WPP Licence No. TN/PMG/(CCR)/WPP-346/2017-2019
Published on 1st day of every month    Posted on 7th & 9th day of Every Month

